| | | |
|---|---|---|
| சாட்சி : DW 1<br>பிச்சை | அ.வ.எண். 120/2017 | 07.02.2024 |

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

6) எனது பிரமாண வாக்குமூலம் மற்றும் எனது எதிர்வழக்குரையில் தவறான சங்கதிகள் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் எனது தகப்பனார் வீர கவுண்டர் கிரையம் பெற்றதாக எந்த வாசகமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கும், எனக்கும் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கில் தவறான ஆதாயம் அடைவதற்காக பி.வா.சா.ஆ. 1 ஆவணம் எனது தகப்பனார் கிரையம் பெற்றதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பூர்வீக சொத்தாகும். எனது எதிர்வழக்குரையில் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின் படி தாவா சொத்துக்கள் எனக்கு சொந்தமானது என்று குறிப்பிட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல, எனது பெரியப்பா கிரையம் பெற்ற சொத்தாகும். உழுவக்கவுண்டருக்கும் எனது தகப்பனார் வீரக்கவுண்டருக்கும் எந்த காலத்திலும் எந்த பாகப்பிரிவினையும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல, வாய்மொழி பாகபிரிவினை தான். நான் சொல்வதுபோல் வாய்மொழி பாகப்பிரிவினை ஏதும் நடைபெறவி்லை என்றாலும் அதன் காரணமாக தான் எனது எதிர்வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் எநத் தேதி மாதம் வருடம் வாய்மொழி பாகம் ஏற்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

7) எனக்கு எந்த தேதி மாதம் வருடம் வாய்மொழி பாகப்பிரிவினை ஏற்பட்டது என்ற விபரம் தெரியாது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின்படி வாரிசு சின்னசாமி கவுண்டர் மட்டும் தான் என்றால் சரியல்ல. இந்து வாரிசுரிமை சட்டப்படி உழுவக்கவுண்டர் வாரிசுகளுக்கு

தான் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கண்டுள்ள சொத்து சொந்தமானது என்றாலும் பிரதிவாதியாகிய எனக்கு தாவா சொத்திலும் எனக்கு உரிமை உள்ளதாக சொல்லும் சொத்திலும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது போல் வடபுறம் தென்புறம் என்று சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தில் கண்டுள்ள பொது வழிநடைபாதைக்கு வடக்கு என்பது தாவா சொத்துக்களை குறிக்கும் என்றால் சரிதான். வா.சா.ஆ. 2 ஆவணத்தில் பாதை என கண்டுள்ளது கிழமேலில் வருகிறதா அல்லது தென்வடலில் வருகிறதா என்றால் அது அவர்களாகவே எழுதிக்கொண்ட பத்திரம் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்பட்டுள்ளதால் அதில் உள்ள பாதை பாத்தியங்கள், பொருண்மைகள் ஆகியவைகளை எதிர்த்து சாட்சி சொல்ல நான் முரண்தடை கோட்பாட்டினால் தடுக்கப்படுகிறேன் என்றால் சரியல்ல. நாகம்மாள் சொத்தில் கிழமேல் மற்றும் தென்வடல் எத்தனை அடி நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

8) வருவாய் துறை ஆவணங்களில் நிலம் ஆர்ஜிதம் செய்தது போக நாகம்மாளுக்கு ஏதேனும் சொத்து உள்ளதாக குறிப்பு பார்த்தேனா என்றால் இல்லை. நாகம்மாள் அவரது காலத்திலோ அல்லது இறந்த பிறகோ நாகம்மாளின் வாரிசுகள் எனக்கு எந்த சொத்தும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரிதான். நாகம்மாளுக்கு முழு சொத்தும் ஆர்ஜிதத்தில் சென்றுவிட்டது என்று எதிர்வழக்குரையில் கட்சி செய்தவது சம்மந்தமாக நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவிலலை என்றால்

சரிதான். நாகம்மாளிக்கு சொத்து உள்ளது என்றாலும் அதன் காரணமாக தான் நான் எந்த ஆவணத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நாகம்மாளுக்கு சொத்து இருந்தால் அதை அவர் எடுத்துக்கொள்ளலாம். சின்னசாமி சொத்திலும், உழுவக்கவுண்டர் சொத்திலும் எந்த ஆர்ஜிதமும் நடைபெறவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக வேண்டுமென்றே தென்வடல் 35 அடிக்கும், கிழமேல் 3 அடிக்கும் தற்போதும் பூமியில் உள்ள பாதையை நில ஆர்ஜிதத்தில் சென்றுவிட்டது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

9) கந்தசாமி மனைவி பிச்சையம்மாளும் வாதியின் குடும்பத்தாரும் அவர்களுக்குள் ஒத்திசைவு செய்து கொண்டதாக சொல்லியுள்ளது சம்மந்தமாக ஏதேனும் ஆவணம் உள்ளதா என்றால் எனக்கும் அவர்களுக்கும் சம்மந்தம் இல்லை. கந்தசாமி மனைவி பிச்சையம்மாளுக்கும், வாதிக்கும் பாதை சம்மந்தமாக ஒத்திசைவு ஏதும் ஏற்படவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக கந்தசாமி மனைவி பிச்சையம்மாள் கட்டுமானம் செய்தது சம்மந்தமாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன், மேற்படி கட்டுமானம் சம்மந்தமாக பெற்ற கட்டிட அனுமதி மற்றும் வரைபடம் கந்தசாமி மனைவி பிச்சையம்மாள் வாங்கியுள்ளர்களா என்றால் எனது இடத்திற்கு நான் வாங்கியுள்ளேன் அவர்கள் இடத்திற்கு வாங்கியுள்ளார்களா என்று எனக்கு தெரியவில்லை. தாவா பி அட்டவணை பாதையில் கந்தசாமி மனைவி பிச்சையம்மாள் எந்த கட்டுமானமும் செய்யவில்லைஎ ன்றால் சரியல்ல. பி அட்டவணை சொத்திற்கு அருகில் உள்ள சொத்தை கந்தசாமி மனைவி பிச்சையம்மாள் வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றால் சரிதான்.

கந்தசாமி மனைவி பிச்சையம்மாள் அவர்களது பட்டா நிலத்தை தான் விற்பனை செய்தார்கள் என்றாலும் தாவா பி அட்டவணை சொத்தை விற்பனை செய்யவில்லை என்றாலும் சரியல்ல. நான் எனது மனையில் இருந்த ஓட்டுவில்லை வீட்டை இடித்துவிட்டு கடைகள் கட்டியுள்ளேன் என்றால் சரிதான்.

10) நான் கடைகள் என்று சொல்வது ஒரு டீ கடை மற்றும் ஒரு மளிகை கடை என்றால் சரிதான். மேற்படி டீ கடைக்கு வாதி செல்லும் பழக்கம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி மளிகை கடை வியாபாரத்திற்குதொந்தரவு செய்கிறாரா என்பது குறித்து மேற்படி கடைக்கு செல்கிறார் என்பது குறித்தும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி டீ கடை அல்லது மளிகை கடையை வாதி கடப்பாறையால் உடைத்தாரா என்றால் இல்லை சுவற்றில் ஆணி அடிக்கதான் விடமாட்டார். எனது கடை கட்டுமானங்களையோ வியாபாரத்தையோ வாதி எந்த வகையிலும் தொந்தரவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கடைகளை வாதி இடையூறு செய்கிறார் என்று வழக்கில் அனுதாபம் தேட வேண்டும் என்பதற்காக பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனது இடத்திற்கு வடபுறம் என்ற வாசகம் தவறானது என்றால் சரியல்ல. எனது இடத்தின் எல்லை வரை கட்டுமானம் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள நான்காலியிடம் எதுவும் விடவில்லை என்றாலும், வழக்குரை பி அட்டவணை சொத்திற்கு அருகில் எனக்கு எந்தவிதமான சொத்தும் இல்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை அடிப்படையாக வைத்து தான் பி.வா.சா.ஆ.7 பட்டா பெற்றேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.7 பட்டா பெறுவதற்கு என்ன மூலாதாரம்

கொடுத்தேன் என்றால் நான் நெம்பர் (224/1G) சொன்னவுடன் VAO கொடுத்தார்.

11) நான் கிராம நிர்வாக அலுவலரிடம் எந்த மூலாதாரமும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.7 பட்டா பெற்றத சம்மந்தமாக வாதிக்கு நான் எந்த அறிவிப்பும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் எந்த மூலாதரமும் இல்லாமல், சட்ட நடவடிக்கைகளை பின்பற்றாமல் எனது செல்வாக்கை பயன்படுத்தி பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. எனது பி.வா.சா.ஆ.7 பட்டா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 2-1/2 செண்ட் நிலம் எனக்கு எந்த காலத்திலும் பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு சந்து உரிமையாக உள்ளது என்றும் அதனை எனது அனுமதியின் பேரில் வாதி பயன்படுத்தி வருகிறார் என்று குறிப்பிட்டுள்ளேன், மேற்படி அனுமதி என்பது எப்போது கொடுப்பேன் என்றால் நான் அனுமதி எதுவும் கொடுக்கவில்லை. எனக்கு சொத்து கிடையாது என்றாலும் அதனை பயன்படுத்தி கொள்ள அனுமதி கொடுக்கவில்லை என்றாலும் நான் மேற்படி அனுமதியை ரத்து செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

12) நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.2 முதல் பி.வா.சா.ஆ.4 வரையிலான புகைப்படங்களுக்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கந்தசாமி மனைவி பிச்சையம்மாள் விற்பனை செய்துள்ள சொத்திற்கு கீழ்புறம் உள்ள காலிமனை சர்வேஎண்.224/1F3 சொத்தில் வாதி சீட் போட்டுள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்தை காலி மனையாக இருக்கும் போது நான் கிரையம் கேட்டேன் என்றாலும், வாதி அதற்கு மறுப்பு தெரிவித்த காரணத்தினால் வாதி பாதையை

அனுபவம் செய்வதற்கு தடை செய்ய முயற்சிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 புகாரில் சர்வே எண் மற்றும் நீள அகலம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பி.வா.சா.ஆ.5 ஆவணத்தை தயார் செய்துள்ளேன் என்றாலும், அதில் கண்டுள்ளது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 முதல் பி.வா.சா.ஆ.10 ற்கும் தாவா சொத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் வாதிக்கு எதிராக பொய்யாக கட்சி செய்கிறேன் என்றாலும் எனது கட்சி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றாலும் சரியல்ல. வாதி என்னிடம் சந்து பாத்தியத்தை அனுபவிப்பதற்கு என்னிடம் பணம் கேட்டதாக சாட்சிய வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் என்னிடம் எந்த பணமும் கேட்கவில்லை.